# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## இடைநிலை மனு எண் 11/2017 இன் நிறைவேற்றல் மனு எண் 26/2012

பெயர்: **அருள்முருகன்** நாள்: 30.01.2023

ம.சா.1 – 1 முதல் 3 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

ம.சா.1 – அருள்முருகன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.50</u>

வழக்கு சொத்து பாலசுப்ரமணியனுக்கு 21.01.2008 கிரைய பத்திரத்தின்படி பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மணிவாசகம் கிரையம் பெறும்போது சொத்திற்கான மூல ஆவணத்தை பார்த்துதான் கிரையம் வாங்கினாரா என்பது எனக்கு தெரியாது. எனது தகப்பனார் பச்சமுத்து மணிவாசகத்திடமிருந்து கிரையம் பெறும்போது அசல் ஆவணத்தை பார்த்து வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. சொத்து பாலசுப்ரமணியத்திற்கானதுதான் என்பதற்கு அசல் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த மனுவை நானும், எனது தகப்பனார், மணிவாசகம் ஆகியோர் சேர்ந்துதான் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். அசல் ஆவணத்தைப்பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால், அசல் வழக்கு எண் 217/2008 என்ற வழக்கில் பாலு, சின்ராஜ், கணபதி, பாலசுப்ரமணியம் ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து மோசடியாக ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி, நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பு வாங்கியுள்ளார்கள். அதன் பின்னிட்டு மணிவாசகம் என்பவர் அசல் வழக்கு எண் 49/2009 என்ற வழக்கை தாக்கல் செய்து அந்த வழக்கில் அவருக்குதான் முழு சொத்தும் உரிமையானது என்று தீர்ப்பு பெற்றார். அந்த தீர்ப்பின் அடிப்படையில்தான் எனது தகப்பனார் நிலத்தை வாங்கினார். அதன் பிறகு நான் கேட்டு தெரிந்து கொண்டேன்.

2) அசல் வழக்கு எண் 49/2009ன் தீர்ப்பின் அடிப்படையில்தான் எனது தகப்பனார் மணிவாசகத்திடம் நிலத்தை கிரையம் பெற்றார். அசல் வழக்கு எண் 49/2009ல் வழங்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை எதிர்த்து மனு தாக்கல் செய்து தற்போது அந்த வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான். எனது தகப்பனார் எனது பெயரில் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு 2011ம் ஆண்டில் எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டது

என்றால், சரிதான். நான் பெயர் மாற்றம் செய்வதற்கு முன்பாக எனது தகப்பனார் பெயரோ அல்லது மணிவாசகத்தின் பெயரோ வருவாய் ஆவணங்களில் இருந்ததில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. மணிவாசகம் கிரையம் பெறும்போது எதிர்மனுதாரர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்த பத்திரம் நிலுவையில் இருந்தது என்று சொன்னால், சரியல்ல. கிரையம் பெற்ற பிறகுதான் கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொண்டார்கள். கிரைய ஒப்பந்த பத்திரம் நிலுவையில் இருந்தபொழுது மணிவாசகம் மற்றும் எனது தகப்பனார் கிரையம் பெற்றதும், எனது தகப்பனார் எனக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்ததும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

3) மணிவாசகம் அசல் வழக்கு எண் 49/2009 வழக்கை உரிமையினை விளம்புகை கோரி எதிர்மனுதாரர்கள்மீது தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த வழக்கில் இறுதி தீர்ப்பு வழங்குவதற்கு முன்பாகவே மணிவாசகம் எனது தகப்பனார் பெயரில் எழுதி வைத்த கிரைய பத்திரமும், எனது தகப்பனார் எனது பெயரில் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் வருவாய் ஆவணங்களில் மோசடியாக பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. அசல் வழக்கு 217/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டப்படி நிலைக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல. மணிவாசகம் எவ்வளவு தொகை கொடுத்து கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதேபோல் எனது தகப்பனார் எவ்வளவு தொகைக்கு கிரையம் பெற்றார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண் 217/2008 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையையும், 11.03.2008 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தையும் ரத்து செய்யக்கோரி தனிப்பட்ட முறையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மணிவாசகம், பச்சமுத்து, அருள்முருகன் ஆகியோர்கள் சேர்ந்து தாக்கல் செய்துள்ளார்கள். இதில் அருள்முருகன் என்பது நான்தான்.

4) நான் தனிப்பட்ட முறையில் அசல் வழக்கு எண் 217/2008 ன் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையையும், 11.03.2008 ம் தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தையும் செல்லத்தக்கது அல்ல என்று கோரி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆகையால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும், சரியல்ல. ஏற்கனவே இடைநிலை மனு எண் 27/2015 என் மனுவை இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்திற்காக தாக்கல் செய்து அந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ள

நிலையில், இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்தும், எங்களுடைய பூர்வீக இடமும் இணையானது என்றால், சரிதான். எங்கள் சொத்தும் வழக்கு சொத்தும் இணை நிலம் என்பதால், எதிர்மனுதாரர்களை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. அதனால்தான் 4ம் எதிர்மனுதாரர் பாலசுப்ரமணியம் எங்களுக்கு ஆதரவாக நிறைவேற்று மனுவில் எதிருரை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

5) 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள் 4ம் எதிர்மனுதாரரிடம் நல்ல எண்ணத்தோடும், சரியான பிரதிபலனுடம் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. அதனடிப்படையில்தான் அசல் வழக்கு எண் 217/2008 வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டது என்றால், சரியல்ல. 1 முதல் 3 வரையிலான எதிர்மனுதாரர்கள்தான் கிரைய ஒப்பந்த தேதியிலிருந்து இன்று வரை சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. அசல் நிறைவேற்று மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.22

ஒப்பம் /அருள்முருகன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.